மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Naanmanikadigai Convey Sense of Life Norms

Dr. D. Jayanthi

Assistant Professor, Department of Tamil, SRM Institute of Science and Technology, Kattangulathur, India

Manuscript ID : **MT127A0070**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 10.10.2022
Revised: 28.10.2022
Accepted: 14.11.2022
Published: 26.11.2022

Pages : 167-171

DOI: 10.5281/zenodo.7375188

ABSTRACT:

Moral life is the highest life is the principle of ancient Tamils. Morality means good conduct. Justice literature is written with the intention of vindicating people. Vilampinaganar is the author of Nanmanikadigai among the eighteen books. There are one hundred and six songs in this book. He has given four comments in each song of the book. The purpose of this article is to highlight the morals, love, friendship, environment, hospitality, education, etc. of the individual's life principles recorded in this book.

KEYWORDS:

Morals of Life, Discipline, Friendship, Education, Moderation, Solidarity, Hospitality, Renunciation

நான்மணிக்கடிகை உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

முனைவர் தா. ஜெயந்தி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,
காட்டாங்குளத்தூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

ஒழுக்கமுடைய வாழ்வே உயர்ந்த வாழ்வு என்பது பண்டையத் தமிழரின் கொள்கை. ஒழுக்கம் என்பதற்கு நன்னடத்தை என்பது பொருள். மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்கத்துடன் படைக்கப்பட்டவையே நீதி இலக்கியங்கள். அவற்றுள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகையை எழுதியவர் விளம்பிநாகனார் ஆவார். இந்நூலில் நூற்று ஆறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நூலின் ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான கருத்துக்களை கூறியிருக்கிறார். இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனிமனிதனின் வாழ்வியல் நெறிகளான ஒழுக்கம், அன்புடைமை, நட்பு, சுற்றம், விருந்தோம்பல், கல்வி முதலியவைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

கருச்சொற்கள்

வாழ்வியல் நெறிகள், ஒழுக்கம், நட்பு, கல்வி, நடுவுநிலைமை, ஒற்றுமைஉணர்வு, விருந்தோம்புதல், புறங்கூறுதல்

முன்னுரை

மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்கத்துடன் படைக்கப்பட்டவையே நீதி இலக்கியங்கள். அவற்றுள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகையை எழுதியவர் விளம்பிநாகனார் ஆவார். இந்நூலில் நூற்று ஆறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நூலின் ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான கருத்துக்களை கூறியிருக்கிறார். இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனிமனிதனின் வாழ்வியல் நெறிகளான ஒழுக்கம், அன்புடைமை, நட்பு, சுற்றம், விருந்தோம்பல், கல்வி முதலியவைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

ஒழுக்கம்

வாழ்வியல் ஒழுக்கம் என்பது நற்பண்பாகும். நன்நெறிகளை பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வில் மேம்பட்ட மனிதராக வாழ முடியும். தனிமனித ஒழுக்கமே சமூகம் மேம்பட அடிப்படை காரணமாக இருக்கும். தனிமனித வாழ்வியல் ஒழுக்கத்தை

அனைத்து அற இலக்கியங்களும் முதன்மைப்படுத்துகின்றன. அவ்வகையில் நான்மணிக்கடிகையில் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்று இரண்டையும் விளக்கியுள்ளார் ஆசிரியர்.

திருவொக்கும் தீதில் ஒழுக்கம் பெரிய
அறனொக்கும் ஆற்றின் ஒழுகல் பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு **(நான். 8:1)**

இப்பாடலில் நல்லொழுக்கம் செல்வத்தை ஒத்தது என்றும் இதனை நீங்கினால் செல்வம் தங்காது என்று கூறியுள்ளார்.

கல்வி

நம்மிடம் இருக்கும் அறியாமையைப் போக்கி அறிவை வளர்ப்பது கல்வியே ஆகும். நான்மணிக்கடிகையில் பல பாடல்களில் கல்வித் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளது. கல்வி கற்க வேண்டிய பருவம் இளமைப் பருவம் ஆகும். அப்பருவத்தில் தான் கல்வி கற்க வேண்டும் என்பதை,

இளமைப் பருவத்துக் கல்லாமைக் குற்றம் **(நான்.94:1)**

என்ற பாடலடி இளமையில் கல்வி பயிலாமல் இருப்பது குற்றம் என்பதை வலியுறுத்துகிறது. மேலும் பழமொழி நானூறு என்ற நூலும் இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் இளமையில் கல் என்கிறது இதனை,

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ - ஆற்றச்
சுரம் போக்கி உல்கு கொண்டார் இல்லையே, இல்லை
மரம் போக்கி கூலிகொண் டார் **(பழமொழி.2)**

என்ற பாடல் உணர்த்தியுள்ளது,மேலும்

"கற்பக் கழிமடம் அஃகும் மடம் அஃகப்
புற்கந்தீர்ந்து இவ்வுலகின் கோளுணரும்
கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
இப்பால் உலகின் இசைநிறீஇ - உப்பால்
உயர்ந்த உலகம் புகும்." **(நான்: 30)**

என்ற வரிகள் ஒருவன் கற்க வேண்டிய நூல்களைக் கசடறக் கற்றால் அவன் அறியாமையானது குறையும், அறியாமை குறைந்தால் இவ்வுலகில் பெற வேண்டிய புகழை நிலைநிறுத்தி மறுமையில் வீட்டுலகம் புகுவான் என்று நான்மணிக்கடிகையில் விளக்கியுள்ளார் விளம்பிநாகனார்.

நட்பு

இவ்வுலகில் நட்பைப்போல் உயர்ந்தது வேறில்லை என்னும் கருத்தை நான்மணிக்கடிகையில் பாகன் தன்னை வருத்தினாலும் யானையும் யானைப்பாகனும் பிரிவதில்லை. தாய் அடித்தாலும் குழந்தை தாயிடமே செல்லும். நண்பர்கள் சினந்து கூறினாலும் பிரியமாட்டார்கள் சேர்ந்தே இருப்பர். ஆனால் பகைவரோ எக்காலத்திலும் ஒன்றாகப் பொருந்துவதில்லை என்று விளக்கியுள்ளது.

மலைப்பினும் வாரணம் தாங்கும் அலைப்பினும் அன்னேயென்று
ஓடும் குழவி - சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யார் ஒட்டார்
உடன்உறையும் காலமும் இல் **(நான்:25)**

மனிதனுக்கு நட்பு என்பது ஒரு வலிமையாகவும், ஒரு உற்றதுணையாகவும் அமைந்து வாழ்வினை சிறக்க செய்ய உதவுகிறது. அன்பின் அடிப்படையில் அமையும் நட்பில் பிரிவுக்கே இடமில்லை என்கிறார் ஆசிரியர்.

நடுநிலைமை

வலியவன், எளியவன், வறியன். செல்வன், தாழ்ந்த நிலையிலுள்ளவன், உயர்ந்த நிலையிலுள்ளவன் நண்பன், பகைவன் என்றெல்லாம் பாகுபாடு கருதாது அனைவரிடத்தும் நடுநிலை பிறழாமல் ஒழுகுதல் வேண்டும். ஒருவர் பக்கம் சேராமல் இருவர்க்கும் பொதுமை உடையவராய் இருத்தல் நடுநிலைமை ஆகும். கோடி நன்மை கிடைப்பதானாலும் நடுநிலை தவறுதல் கூடாது என்று 27 ஆம் பாடல் எடுத்துரைக்கிறது. இதனை,

..நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள் பெறினும் **(நான்.27:2-3)**

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியலாம்.

ஒற்றுமை உணர்வு

மனிதர்களுடன் மனிதர் ஒற்றுமையாக இருந்தால் தான் இவ்வுலகம் அமைதியாக இருக்கும். சண்டையிடுவதில் அர்த்தம் இல்லை. ஒருவரை ஒருவர் புரிந்து

கொண்டு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் தான் வாழும் வாழ்க்கை இன்பமுள்ளதாக அமையும். ஒற்றுமையே பலம் என்பது பழமொழி. இப்பழமொழிக்கு ஏற்ப அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்கிறது நான்மணிக்கடிகை,

மொய் சிதைக்கும் ஒற்றுமை இன்மை (நான்.23:1)

என்ற பாடல் வரியின் மூலம் உணரமுடிகிறது. இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் ஒற்றுமை உணர்வு இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி கூறியுள்ளதை அறியமுடிகிறது.

விருந்தோம்பல்

முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து என்னும் வள்ளுவர் வாக்கிற்கினங்க சங்க காலத்தில் பெரிதும் போற்றப்பட்ட பேரறம் விருந்தோம்பல் ஆகும். இல்லத்திற்கு புதிதாக வருபவர்களை வரவேற்று உபசரிக்கும் பாங்கே விருந்தோம்பல் ஆகும். நான்மணிக்கடிகையில் விருந்தோம்பல் குறித்த செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. இதனை,

நன்றூட்ட நந்தும் விருந்து (நான்.63:4)

தமரல்லார் கையத்து ஊண் (நான்.94:4)

.........................சென்ற
விருந்தும் விருப்பிலார் முன்சாம் (நான்.47:1-2)

மேற்கூறப்பட்ட பாடலடிகள் ஆனது விருந்தினருக்கு நல்ல உணவு அளிக்க வேண்டும் என்றும் அன்புடையவர் வீட்டிற்கு மட்டுமே விருந்திற்குச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.

புறங்கூறுதல்

ஒருவரை நேரில் காணும் போது புகழ்ந்து கூறி காணாதவிடத்து பழியுரைப்பது புறங்கூறுதல் ஆகும். இச்செயல் இழிவான செயல் என்றும் குறைக்கூறி மகிழக்கூடாது என்றும் புறங்கூறுதல் கொலை செய்தலை ஒக்கும் என்கிறார். இதனை,

.... பிறனைக்
கொலையொக்கும் கொண்டு கண் மாறல் (நான்.8:2-3)

என்ற பாடலடி சுட்டுகிறது.

முடிவுரை

மனிதன் எப்படி வாழவேண்டும் எப்படி வாழக்கூடாது என்று அற இலக்கியங்கள் அனைத்தும் எடுத்து இயம்புகின்றன. அதிலும் திருக்குறளில் கூறப்படாத வாழ்வியல் அறங்களே இல்லை எனலாம். அவ்வகையில் நான்மணிக்கடிகையில் ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான அறக்கருத்துகளை உட்புகுத்தி தனிமனிதன் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளை தெளிவுபடுத்தியுள்ளார் விளம்பிநாகனார். மேலும், பிறரை மதிக்க வேண்டும், நட்பு கொள்ள வேண்டும், கல்வி கற்க வேண்டும், கொடுத்து உண்ண வேண்டும், அன்பு கொள்ள வேண்டும், புகழுடன் வாழ வேண்டும். ஊன் உண்ண கூடாது, புறங்கூறுதல் கூடாது, சோம்பல் கூடாது என்றும், கடுஞ்சொல் கூடாது என்று தனிமனித நெறிகளை விளக்கியுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், மூலமும் தெளிவுரையும் – இரண்டாம் தொகுதி - தமிழ் நிலையம், வர்த்தமானன் பதிப்பகம், 2007
2. இராமசுப்பிரமணியம்,எம்.ஏ (உ.ஆ) பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி 1 செல்லப்பா பதிப்பகம், மதுரை - 625001 முதற்பதிப்பு -2009
3. இராமசுப்பிரமணியம், எம்.ஏ (உ.ஆ) பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி 3 செல்லப்பா பதிப்பகம், மதுரை - 625001 முதற்பதிப்பு -1999
4. பத்மதேவன், தமிழ்ப்பிரியன் (உ.ஆ) நீதி நூல் களஞ்சியம் கொற்றவை வெளியீடு சென்னை -600017 முதற்பதிப்பு -2014
5. புலியூர்க்கேசிகன் (உ.ஆ) திருக்குறள் புதிய உரை - பூம்புகார் பதிப்பகம். 2010

REFERENCES

1. Eighteen Books, Source and Commentary - Volume II - Tamil Center, Varthamanan Publishing House, 2007
2. Ramasubramaniam, MA (Narrator) Eighteen Lower Accounts Volume 1 Chellappa Publishing House, Madurai -625001 First Edition -2009
3. Ramasubramaniam, MA (Narrator.) Eighteen Lower Accounts Volume 3 Chellappa Publishing House, Madurai -625001 First Edition -1999
4. Padmadevan, Tamilpirian (Narrator.) Judicial Book Archive Kotavai Publication Chennai -600017 First Edition -2014
5. Puliyurkesikan (Narrator) Tirukkural New Text - Poombukar Publishing House. 2010